நிலை இல்லை. அனைவரும் உடனடியாகப் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டு, காலை, மதியம், இரவு என்று மூன்று வேளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் உணவு வழங்கி, உடை வழங்கி, பாய், தலையணை என்று அனைத்தையும் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களையும் என்னையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக அங்கே அனுப்பி வைத்து, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து முழுவதுமாகச் சேதம் அடைந்த வீடுகளுக்கு உடனடியாக 5 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டது. 80 குடும்பங்களுக்கும் 10 கிலோ அரிசி, (மேசையைத் தட்டும் ஒலி) வேட்டி, சேலை போன்ற அனைத்தையும், நேரடியாக 80 குடும்பங்களையும் சந்தித்து, வழங்கியுள்ளோம். தீ விபத்து ஏற்பட்ட இடத்தையும் நேரடியாகப் பார்வையிட்டு உடனடியாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்து ஆகும். இது மிகப் பெரிய தீ விபத்தாக இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில், உடனடியாக அந்த இரவு நேரத்திலும் வழங்கிய உத்தரவின் அடிப்படையில்தான் ஓர் உயிரிழப்புக்கூட ஏற்படாமல் மக்களின் உயிரைப் பாதுகாத்துத் தந்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

(ஆ) மன்னார்குடி நகராட்சி, குப்பைக் கிடங்கினால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், தகவலை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.*

***திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு மைக் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மைக் கொடுத்தாயிற்று, பேசுங்கள்.*

2016 ஆகஸ்ட் 4]

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மன்னார்குடி நகராட்சி 150 வருடகால புகழ் பெற்றதாகும். மன்னார்குடி நகராட்சியின் குப்பைக் கிடங்கு, நகருக்கு மிக அருகிலேயே அமைந்துள்ளது. அவ்வப்போது அதில் தீ விபத்து ஏற்பட்டு, அதன்மூலம் வெளியாகும் புகை 8, 14, 15, 31, 32, 33 ஆகிய வார்டுகளை சூழ்ந்து கொண்டு, அங்குள்ள மக்களுக்கு மிகப் பெரிய சுகாதாரச் சீர்கேடாக மாறிவருகிறது. இதனால் அவ்விடங்களில் வீசும் துர்நாற்றக் காற்றால் நுரையீரல் பிரச்சினை போன்ற மிகப்பெரிய பிரச்சினைகளெல்லாம் உருவாகி வருகின்றன. 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட இப்பகுதிகளில் வசிக்கும் மக்களைப் பாதிக்கும் வகையில் உருவாகும் இந்தச் சுகாதாரச் சீர்கேட்டை, அவசரப் பிரச்சினையாகக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவும், இப்பகுதியில் சேரும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என இரு பிரிவுகளாகப் பிரிக்கவும், மக்கும் குப்பைமூலம் இயற்கை உரம் தயாரித்து, அங்கு இருக்கும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் அங்கிருக்கும் பிளாஸ்டிக் மற்றும் இரும்புப் பொருட்களை நகராட்சிக்கு வருமானமாக இருக்கும் வகையில்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். அவ்வளவுதான்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசி வரி, முடித்துவிடுகிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளைச் சிறப்பாகச் செய்து அங்கே வசித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவும் வகையிலும், இயற்கை உரம் தயாரிக்க ஏதுவாக ஒரு திட்டத்தையும் உருவாக்கி அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2016 ஆகஸ்ட் 4

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஐந்தாண்டு பொற்கால ஆட்சியில், தமிழகத்தில் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.1,515 கோடியே 19 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனை புரிந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த தி.மு.க. ஆட்சியில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக ரூ.303 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி நகராட்சி, ஒரு தேர்வு நிலை நகராட்சியாகும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். பேசாமல் அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்த நகராட்சியின் மக்கள் தொகை, 66,997 ஆகும். 33 வார்டுகள் கொண்ட மன்னார்குடி நகராட்சிப் பகுதியின் பரப்பளவு 11.55 சதுர கிலோ மீட்டர் ஆகும். மன்னார்குடி நகரில் தினமும் சேரும் குப்பையின் அளவு 24 டன் ஆகும். மன்னார்குடி டெப்போ சாலையில் நகராட்சியின் குப்பைக் கிடங்கு 3.65 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நகராட்சியில் 66 பொது சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் 96 தனியார் பணியாளர்கள் குப்பை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். 2* Compactors, 2 Dumper truck 2 Tipper Lorry, *2 ஆட்டோக்கள் ஆகிய வாகனங்களைக் கொண்டு நகராட்சிப் பகுதிகளின் குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு, டெப்போ சாலையில் உள்ள குப்பைக் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. இந்தக் குப்பைக் கிடங்கில், கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் சில சமூக விரோதிகளால் தீ விபத்து ஏற்படுத்தப்பட்டது. அந்தத் தீ அன்றே அணைக்கப்பட்டு, உடனடியாக நிலைமை கட்டுக்குள்*

2016 ஆகஸ்ட் 4] [திரு. எஸ்.பி. வேலுமணி]

கொண்டுவரப்பட்டது. இனிவரும் காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்க, தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், மன்னார்குடி நகராட்சிக் குப்பைக் கிடங்கில் உடனடியாக 8 இன்ச் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, 4 எண்ணிக்கையிலான தீயணைப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, இந்தக் குப்பைக் கிடங்கு வளாகத்தில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு, கண்காணிப்புப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதால், தீ விபத்து ஏதும் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மன்னார்குடி நகராட்சியில், இந்த இடத்தைத் தவிர, ஆர்.பி. சிவம் நகர், புல் பண்ணைப் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான 4 ஏக்கர் பரப்பளவில் மற்றொரு குப்பைக் கிடங்கு உள்ளது. இந்தக் குப்பைக் கிடங்கில், குப்பைகளைப் பதப்படுத்துதல், உலர்த்துதல், உரமாக மாற்றுவதற்கு உரக் கிடங்கு அமைத்தல் போன்ற திடக் கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கோடியே 64 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, உர மேடை, உலர் தளம், உர சேகரிப்புக் கூடம், அணுகுசாலை, தண்ணீர் வசதி, மின் வசதி மற்றும் சுற்றுச் சுவர் அமைத்தல், உரக் கிடங்கு அமைத்தல் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 29–6–2016 அன்று பணி ஆணையும் வழங்கப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்